# வேளச்சேரி - தாம்பரம் தயாராகிறது மெட்ரோ பாதை

சென்னை, பிப். 24–

வேளச்சேரி – தாம்பரம் இடையே மெட்ரோ பாதை அமைக்க, விரிவான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை தயாரிக்கும் பணி நடக்கிறது. இது, தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில், விமான நிலையம் – விம்கோ நகர், பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, 54 கி.மீ., மெட்ரோ திட்டம் நிறைவேற்றப்பட்டு, ரயில் போக்குவரத்து நடந்து வருகிறது. மெட்ரோ இரண்டாவது திட்டத்தில், 61 ஆயிரத்து, 843 கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 118.9 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை கட்டுமான பணிகளுக்கு, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இத்துடன், சென்னை விமான நிலையம் – கிளாம்பாக்கம் புதிய பஸ் நிலையம் வரை, மெட்ரோ பாதை நீட்டிப்பிற்கான விரைவான திட்ட அறிக்கை, தாம்பரத்திலிருந்து, வேளச்சேரி வரை மெட்ரோ பாதை அமைக்க, விரிவான சாத்தியக்கூறு அறிக்கையும், தயாரிக்கும் பணி நடந்து வருகிறது.

இவ்வாறு, பட்ஜெட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.